மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 143 மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக் கிணங்க ஒத்தி வைக்கப் பெற்றுள்ளது. அடுத்து வினா எண். 144.

சாத்தனூர் அணை பூங்காவில் மின் விளக்குகள்.

144—(*வினா எண். 29)—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா—

சாத்தனூர் அணை பூங்காவில் மின் விளக்குகள் சரியாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றனவா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, சாத்தனூர் அணை பூங்காவில் உள்ள மின் விளக்குகள் சரியாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, சாத்தனூர் அணை வடாற்காடு மாவட்டத்தின் தெற்கு பகுதியில் உள்ள ஒரு சுற்றுலா மையமாக இருந்து வரு கிறது. ஆனால் சமீப காலங்களில் அங்கே விளக்கு அலங்காரங்கள், பூங்காக்கள் போன்றவைசரியான முறையில் பராமரிக்கப்படாத காரணத்தால் தான் சுற்றுலாப் பயணிகள் அங்கே வருவது கூட தற்போது குறைந்து இருக்கிறது என்பதை அமைச்சர் அறிவாரா? எனவே ஏற் கெனவே 1974, 1975, 1976 ஆம் ஆண்டுகளில் எவ்வளவு செலவழித்து அவைகள் பராமரிக்கப்பட்டனவோ அதே அளவுக்குத் தொகை ஒதுக்கி அவற்றைப் பராமரிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சரியாகப் பராமரிக்கப்பட வேண்டும் என்பதற் காகத்தான் நானே அந்தப் பகுதிக்குச் சென்று அந்த இடங் களைப் பார்வையிட்டு, இன்னும் மின் விளக்குகள் எங்கெங்கே எந்தெந்த வகையில் போட வேண்டும் என்று யோசனை தெரிவித்துவிட்டு வந்திருக்கிறேன். அடுத்தமுறை மாண்புமிகு உறுப்பினர் அந்தப் பக்கம் போகிறபோது அவற்றைப் பார்த்து விட்டு வந்து சொல்லலாம். தற்போது அவற்றின் பராமரிப்புக் காக ஆண்டுதோறும் ரூ. 20 இலட்சம் ஒதுக்கப்படுகிறது. இதில் மின்சாரப் பராமரிப்புக்காக ரூ.16 இலட்சம், மீதியிருக்கிற ரூ.4 இலட்சம் மின்கட்டணமாகக் கட்டப்பட்டு வருகிறது. ஆகவே, தற்போது அந்த ஒளிசிந்துகிற வண்ண விளக்குகள் எப்படி இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் பார்த்து விட்டு சொல்லட்டும். மேலும், தேவை என்றால் அலங்கார விளக்குகள் போடப்படும்.

1989 ஏப்ரல் 27]

[முற்பகல் 9-40]

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே சரியான முறையில் 1974–75 ஆம் ஆண்டுகளில் தமிழ் சினிமா படங்கள், தெலுங்கு சினிமா படங்கள், இந்தி சினிமா படங்கள் எல்லாம் சாத்தனூரில் எடுக்கப்பட்டன. ஆனால் சமீபத்தில் அது சரியான முறையில் இல்லை என்ற காரணத்தாலே தான் அவர்கள் அங்கு வருவதில்லை. அதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அந்த வகையில் அதை உரிய முறையில் பராமரித்து பழைய நிலையை அடைவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, உறுப்பினர் அவர்களுக்கு ஒரு செய்தியை நான் சொல்ல விரும்புகிறேன். பொதுவாகவே இப்போது தமிழ்த்திரைப்படங்கள் இப்படிப்பட்ட அணைக்கட்டுகள், ஆற்று ஓரம், சாலை ஓரம் ஆகிய இடங்களில் எல்லாம் எடுப்பதில்லை. சென்னைக்குள்ளேயே எங்கேயோ ஒரு வீட்டிலே உள்ளேயே எடுத்துவிட்டு, அதையும் ஸ்டுடியோவில் கூட எடுப்பதில்லை ; ஒரு வீட்டை நன்கு டெக்கரேட் செய்து அதற்குள்ளேயே எடுத்து முடித்துவிடுகிறார்கள் சிக்கன முறையில். அங்கேயே ஆறுகளைக் கொண்டு வருகிறார்கள் அணைகளைக் கொண்டு வருகிறார்கள் ; எல்லாம் ஒரு சிறு வீட்டுக்குள்ளேயே முடிந்து விடுகிறது. ஆகையினாலேதான் இப்போது தமிழ்த் திரைப்படங்கள் இப்படிப்பட்ட இடங்களுக்குப் போவது குறைந்து இருக்கிறது. உறுப்பினருக்கு அப்படிப்பட்ட ஏதாவது திரைப்படம் தயாரிக்கும் திட்டம் இருந்து அதை சாத்தனூரிலே எடுப்பது என்று முடிவு எடுத்திருந்தால், உறுப்பினருக்காக பிரத்தியேக நடவடிக்கை எடுத்து, சாத்தனூரில் மின் விளக்குகள் அமைக்கப்பட்டு அவருக்கு அந்த வாய்ப்பு தரப்படும்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் ஒரு தவறான பார்வையில் சினிமாவைப் பற்றி சொல்கிறார்கள். சாத்தனூர் அணைக் கட்டைப் பற்றி, நான் சினிமா தயாரிப்பாளர் என்ற முறையிலே சொல்கின்றேன். சாத்தனூர் அணைக்கட்டை பல்லாயிரக் கணக்கான தடவை எடுத்து எடுத்து ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உங்களை மாண்புமிகு உறுப்பினர் என்ற முறையிலே தான் கேள்வி கேட்க அனுமதித்து இருக்கின்றேன் (சிரிப்பு).

திரு. பெ. சீனிவாசன் : பார்த்த உடனே இது சாத்தனூர் என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஒவ்வொரு சாதாரண ஜனங்ளுக்குக்கூட அது புளித்துப் போன ஒரு அணைக்கட்டு; சினிமாலகத்திலே அது ஒரு புளித்துப் போன ஒரு சைட்; அந்த

லொக்கேஷன் எடுபடாது; ஆகையால் புதிய புதிய இடங்களைப் போய்ப் பார்த்து எடுக்கிறார்கள். அமைச்சரவர்கள் புதிதாக வந்திருக்கிற படங்கள் எல்லாம் சென்னையிலே ஒரு வீட்டில் எடுக்கிறார்கள் என்று சொன்னார்கள்; அப்படியல்ல. ஒரு வீட்டிலே எடுக்கிற காட்சியை எடுப்பார்கள்; மற்ற காட்சிகளை எல்லாம் தொலை தூரத்தில் போய் இடங்களைக் கண்டுபிடித்து எடுக்கிறார்கள். இது அமைச்சருக்குத் தெரியும்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசன் எடுத்த படங்களைப் பார்த்ததில்லை.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒரு தயாரிப்பாளரா ?

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய வட ஆற்காடு மாவட்டத்தினுடைய சாத்தனூர் அணைக்கட்டின் பெருமைகளை, அலங்காரங்களை இங்கே சொன்னார்கள். தென் மாவட்டங்களிலே வைகை அணைக்கட்டு தலைவர் காமராசர் காலத்திலே—தென் மாவட்டங்களுக்கு சுற்றுலாத் திட்டமாக அமைக்கப்பட்டு ஒவ்வொரு சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் பார்ப்பதற்காக போவது வழக்கமாக இருக்கிறது. இன்றைக்கு வைகை அணைக்கட்டு பொலிவு இழந்து, அழகு இழந்து, மின் விளக்குகள் எல்லாம் சரிவர பாரமரிக்கப்படாமல் இருப்பது ஆகியவைகளை பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அண்மையில் அங்கே சென்று இருந்த போது முறையிட்டார்கள். சாத்தனூருக்கு இருக்கிற மனவளம், அந்த மண் வாசனையை மதுரை மாவட்டத்திலுள்ள வைகை அணைக்கும் வைத்து அவர்களுடைய கருணை திரும்புமா என்று தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் திரு. திருவேங்கடத்துக்கு இருந்த மண்வாசனை அக்கறையில் சட்டமன்றத்தில் ஒரு கேள்வி போட்டு இருக்கிறார். தென்பாண்டி மண்டலத்தின் மண் வாசனையிலே இவ்வளவு அக்கறையிலுள்ள திரு. தங்கபாண்டியன் கேள்வியொன்றை எழுதி இந்தத் துறைக்கு அனுப்பி இருக்கலாம். இருந்தாலும் அவருக்கு நான் சொல்கிறேன், அவரோடு நானும் சென்று வைகை அணையிலே விளக்குகள் போடுவது பற்றி அதிகாரிகளோடு ஆலோசனை நடத்திவிட்டு வந்திருக்கின்றேன். அது எப்படி செயல்படுகிறது என்பதை மண் வாசனை உள்ள திரு. தங்கபாண்டியன் ஒரு முறை சென்று வந்து மீண்டும் என்னிடத்தில் அதைப் பற்றி தெரிவித்தால் நலமாக இருக்கும்.

1989 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுவாகவே பொதுப் பணித் துறைக்கு அனுப்பினால் வட ஆற்காடு மாவட்டத்தைப் பற்றிய விடைகள் தான் வருவதாகச் சொல்கிறார்கள். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, எந்தப் பகுதியிலே இருந்து கேள்விகள் வந்தாலும் அரசு வரவேற்கிறது.

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு தலைவரவர்களே, சாத்தனூர் அணையில் பெரிய முதலைப் பண்ணை ஒன்று உள்ளது. பல்வேறு சுற்றுலாப் பயணிகள் வருகின்ற காரணத்தாலும், அங்கே புதிதாக பார்க்குகள் அமைத்து அவர்களைக் கவருகின்ற வகையிலேயும் ஏற்பாடு செய்யவேண்டும். சுற்றுலாப் பயணிகள் மூலம் வருகின்ற வருமானம் ஒரு ஆண்டுக்கு எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, கேள்வியின் விளக்குகள் போடுவதைப் பற்றி, முதலைப்பண்ணை பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். முதலைப் பண்ணையைப் பார்க்க சுற்றுலாப் பயணிகள் நிறைய பேர் வருகிறார்கள் ; ஆனால் அதற்கு வருகிற வருமானம் எவ்வளவு என்றவிவரம் என்னிடம் தற்போது இல்லை. அதுகுறித்து தனிக் கேள்வி போட்டால் விவரமாக பதில் அளிக்க முடியும்.

நாட்ராம்பள்ளித் தொகுதியில் செட்டேரி அணை.

145 (*வினா எண் 501)— திரு. ஆர். மகேந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதியில், வெலகல் நத்தம் ஊராட்சியில் கட்டுப்பட்டுள்ள செட்டேரி அணையைச் சீர்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது எடுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): இந்த அணை தற்பொழுது நல்ல நிலையில் உள்ளதால், இதனை சீர் செய்ய நடவடிக்கை ஏதும் தற்போது தேவையில்லை என்று அரசு கருதுகிறது